சேசுமரிசூசை துணை.

விஞ்ஞையோர் புகழும் தஞ்சை

சித்திரக்கவி நாவலர்.

T. M. துரைசாமிபிள்ளை

அவர்கள் இயற்றிய பேரின்ப

ஆனந்தகான கீர்த்தனங்கள்.

இஃது

தஞ்சை

வலம்புரி

M. சந்தனசாமி பிள்ளை அவர்களால்

தஞ்சை

தாரா அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

1922.

காப்பிகள்-3000

ஸெப்ட்டம்பர்மீ 1 உ

[அணா

4 - OCT

Q2:4(7) N22

224318

O2:417 N99
4-OCT 1922

சேசுமரிசூசை துணை.

விஞ்சையோர் புகழும்

தஞ்சை சித்திரக்கவி நாவலர்

T. M. துரைசாமிபிள்ளை அவர்கள்

இயற்றிய

ஆனந்தகான கீர்த்தனங்கள்.

1914

நேரிசை வெண்பா.

வானுலகி லுந்துலங்கும் வல்லபரா னின்புகழை
நானுலகி லேபாட நாடினேன்—பானுமுடி
மாதாசி மாமரியின் மாட்சிநிறை தாட்கமலம்
ஆதரையி லெயெனக்கு ஆதரவு.

விருத்தம்

அந்தரம் புவியுங்காவு மனைத்துமே யமைத்ததேவா
உந்தனால் படைத்தஆதன் ஊழ்வினை போக்கவேண்டி
மைந்தனு யுருவுகொண்டு மானிலத் துதித்தவாறும்
விந்தைகள் பலதும்செய்த வகையதைக் கூறுவேனே:

சுவாமிபேரில் துதி

ஜெயராமனென்ற வர்ணமெட்டு.

இராகம்-நாட்டை-தாளம்-ஆதி

பல்லவி

நசரேசா நாபதி நசரேசா
நாதனே வேத போதா நம்பினேன் (நச)

அனுபல்லவி

விசுவாசா கதிதா
மேலுயாரு கூறுகாரு முனையன்றி (நச)

சரணம்

தருவாயே நின்னருள்
தஞ்சமென நெஞ்சிலுன்னை நித்தேதன் (நச)

துரைசாமி தொழுதிடும்
ஆயர்குலை கேயபால நாயகா (நச)

224318
சென்னை-600 008
லைப்ரரி

வேலவா என்னை ஆளாயித்தருணம் என்ற வர்ணமெட்டு
இராகம்-இந்துஸ்தான்-தோடி—தாளம்-ஆதி

பல்லவி

நாதனே உன்னை நம்பினேனெனக்கருள்
நாதனே வசு நாதனே வசு (நாத)

அனுபல்லவி

ஆதனைப்படைத்த அருந்துணைகொடுத்த
ஆதிப்பிதாவின் மக னாகிவெளியிற்
கவதரித்த தேவ தேவ (நாத)
மாதவர் தவத்தால் வளன்மரிஜெபத்தால்
வந்தவதாரனே உன் மாமலரடி
வந்தனை செய்தேனே வசு (நாத)
ஆயர்கள் வற்றும் அனைவரும் போற்றும்
ஆண்டவனாய் வந்த அன்பனே உன்னை
ஆண்டிடவே னானே வசு [நாத)
மாயவதாரா மனோவலங்காரா
மைந்தன் துரைசாமிக்குன் வாக்கருள்வா
மன்றாடிப்பாடினேன் வசு (நாத)

அச்சாமேரி லாகீச என்ற வர்ணமெட்டு
இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி

பல்லவி

இன்னிலத்தோர் மன்றாடும் ஏசுநாத சுவாமியே
சுவாமியே எங்கள் சுவாமியே

அனுபல்லவி

மன்னவுனைத் தொழுதோம் மன்றாடியே அழுதோம்
மாதவா சாதகம் நீதருவாய் நேமியே (இன்)
கன்னிமரியிடமாய் கற்குகையின் தடமாய்
காணவே வானவர் தான்பணிய வந்தவா (இன்)
நித்தமுனை நினையா நெஞ்சனானேனையா
நேசா பிரகாசா சருவேசா கொண்டாடினேன் (இன்)
பத்தியாகவே உன்னை பாலன் துதித்தேன் என்னை
பாரும் இங்குவாரும் துயர்தீரும் சர்வேசனே (இன்)
தஞ்சையில் வாழும் துரை சாமிபிள்ளையின் குறை
சங்கடம் தீர்க்கவே மங்களமாய் பாடினேன் (இன்)

திருச்செந்தூர் வளரும் என்ற வர்ணமெட்டு
இராகம்-தேசிகம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்

திரு—சேசு நாதா உமை நானே என்
சிந்தையில் நிதந்தானே பூமானே
செபித்துமே துதித்தேனே
திருவருளும் கோனே (சேசு)
உயர்—ராசமாபுரி யின் வாசா உமை
நம்பினேன் காரியேசா சர்வேசா
நல் வர மருள் நேசா
நவின பிரகாசா (ராச)
தேவ—நேச சுதனே வருவீரே உந்தன்
சேயனுக் கருள்வீரே ஈசரே
சீஷர்களை நீரே
தெரிந்து கொணர்ந்தீரே (நேச)

பூவில்—தாசன் துரைசாமியின் பதமே பல
சாற்றினேன் நான் நிதமே இதமே
தாழினை யே சதமே
தருவாய் மோக்ஷ பதமே (தாச)

மீனாட்சிரமணா வேதாந்தசுகுணா என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

நாதனைத் தினமே நீ நாடு மனமே ஏக

அநுபல்லவி.

வாதனை நீக்க வல்வினை போக்க
வந்துப்பிறந்தா ரிந்தப்புவிதனில்
மூர்த்தமரிவளான் சுந்தரபால (நாத)

வேதியர் விதித்த விதமுனை துதிக்க
விண்ணவர் முதல் பண்ணவர் பலர்
மண்ணினில் நிதம் எண்ணிப்புகழுறும் (நாத)

வெல்லைமாமலையில் விளங்குமக்குகையில்
வெய்யிற் டனிமழை பெய்யக் குளிரினில்
மெய்யவதாரம் செய்தவமேக (நாத)

தரைதனிலே துரை சாமிபத முறை
சாற்றியே உமைப் போற்றியே தொழு
தேற்றினேன் துயர் மாற்றும் மாதவ (நாத)

பரமானந்த மெய்ப்பரங்குன்றேன் என்ற வர்ணமெட்டு.

இராகம்—தேசிகதோடி—தாளம் ஆதி

ஓரடிச்சந்தம்.

பல்லவி

பட்ட பாட்டையே துரைசாமி
பகர்வேன் ஏச (பட்ட.)

அனுபல்லவி.

துட்ட யூதா ஸென் போன் சோதனையுற்றான்
துரோகம் செய்ய பொருளாசையால் கெட்டான்
கட்டியும் கன்னத் திலே முத்தமுமிட்டான்
காட்டிக் கொடுத்துபழி தானுயிர் விட்டான் (பட்ட)

சரணம்.

கெட்டயூதர்கள் கையில் கிட்ட வுமையிழுத்து
கெட்ட கயிறுகொண்டு கட்ட கண்களைமூடி
குட்ட காரியுமிழ்ந்து திட்ட அடியால் தசை
முட்ட கிழிந்திரத்தம் கொட்ட பலபேர்காண

கட்டி யுருட்டி புரட்டிய வஸ்திரம் நீக்கி
ஆங்கியு மாட்டி

தட்டி மிரட்டி சுருட்டிய முண்முடி தூக்கி
அவர் தலையில்

கொட்டியு மட்டியே எட்டடா என்றவர் தாக்கி
யூத மன்னனென

சுட்டி யாட்டியே விட்டிடா மலிவர் தூக்கி
சிலுவையின்மேல்

கோரமாயிதோ வீரமாய்சில யூதரும்பல வாதனையிட
போட்டு ஆணிகள் பூட்ட

சோரியே பெரும் வாரியாய்வர கூராணிகர மீதிலடியே
பட்டு காலிலும் இட்டு

சோரர் மத்தியில் நேரிவரை சோரனெனவே தீரமாகவே
காட்டி சிலுவை நாட்ட

பாரோரே யறிந்தாரே யிவரும் தேவனெனவே பூவில்மகிழ
காடி பானத்தேடி (பட்ட)

சஞ்சலமாய் நெஞ்சமிகவுழன்றேனே என்ற வர்ணமெட்டு.
இராகம்—தேசிகதோடி—தாளம் ஆதி.

கண்ணிகள்.

சந்தமும் சிந்தையிலே உன்னைநானே போற்றி
வந்தனம் புரிந்தேன் ஏசுபெருமானே
இத்தரையிலே ஜெனித்த
சத்துருவையே ஜெயித்த
உத்தமா உயிர் விடுத்த
சத்திய சொரூபா (சந்த)

வல்லதொரு கல்லறையிலுமைத்தானே வைத்து
நல்லடக்க மேபுரிந்தான் சூசையோனே
வானவ ருமைத்துதிக்க
தானாய் கல்ல றையிளக்க
ஞானபா னுயுயிர்க்க
பாணிலங் கணிலே (சந்த)

நாதனே நற்போதனையு மளித்தோனே அந்த
யூதர்களின் வேதனையால் மரித்தோனே
நல்திரைச் சீலைகிழிந்து
கல்மலைகளும் பிளந்து
கல்லறைகளும் திறந்த
வல்ல ஏக தேவா (சந்த)

தந்தையே நீர் வந்துதவும் சிறியேனே நான்
தந்திரமும் மந்திரமும் அறியேனே
தஞ்சை துரை சாமியுனை
அஞ்சலி செய்தேனே எந்தன்
சஞ்சலமகற்ற வாரும்
வஞ்சக மறியேன் (சந்த)

மன்றுளாடியவா என்ற வர்ணமெட்டு
இராகம் தேசிகதோடி—தாளம்—ரூபகம்

பல்லவி

தொண்டர்போற்றியவா தேவா தொண்டர்போற்றியவா
கண்டுமுனையான்பணிய என்றுவரமேதருவாய் (தொ)

அனுபல்லவி

அண்டம்புவன மனைத்தும் தொடுத்தவா
ஆண்பெண்ணிருவரை அன்றே கொடுத்தவா
தோன்றுற ஏதேனிற்றோணை விடுத்தவா
சுரரொடு மறையவர் சகல
வாமொடு முனிவர்கள் புகல (தொ)

அறிவு மரத்தை வனமதில் நட்டவா
அக்கனி தொடாதென்றணையு மிட்டவா
அருந்த அவரை துரத்தியே விட்டவா
அருமொரு பரகதி நாட
இருள் மன பேயது ஓட (தொ)

ஈசாக்கு தன்னை பலியிடு என்றவா
இஷ்டமாயாபிர காமிடம் சென்றவா
நேசமகனை வெட் டாமேதனில் வென்றவா
நிதியொடு புவிதனில் நாடும்
மதியுள மானிடர் தேடும் (தொ)

பாவி அரக்கன் படையை ஒழித்தவா
பகர் தாவீதுக்கு பலமும் அளித்தவா
பாலன் துரைசாமிபாடற் களித்தவா
பக்தர்கள் பலதரம் பாடவே
உத்தமர் நிதநிதம் கூடவே (தொ)

பிதாவின்பேரில்.

ஆண்டிப்பண்டாரம் என்ற வர்ணமெட்டு.
இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆதிப்பிதாவே உமை
அன்று கண்டேனே பழமை (ஆ)

அனுபல்லவி.

ஆதாமின் மக்களிலே ஆபேல்பலியில் நின்று (ஆ)
சூதாயவனைக்கொன்ற துஷ்டகாயீனைசபித்த

பாதகரை யழிக்க பாரில் பெரும் வெள்ளத்தை
தீதாய வித்துநோயன் தேவி முதலோரைக்காத்த (ஆ)

பாபிலோன் கோபுரத்தை பாரில் கட்டாதவண்ணம்
சாபமளித்து பாஷை தான் வேறாகவேபிரித்த (ஆ)

துஷ்டரிருக்கும் சோதோம் பட்டணமக்கினியால்
மட்டமாய் தானெரித்து இஷ்டலோத்துதன்னைமீட்ட (ஆ)

பாரில்மோயீசன் கோலே பாம்பாக்கியே விடுத்து
ஆரோன் கோலாற்பாவோ ரூளுமூணையே கெடுத்த (ஆ)

கன்னியமாய் தொண்டருக்கு கடலில்வழி விடுத்து
மன்னாவெனும் போஜனம் வனாந்தனிலே தான்கொடுத்த (ஆ)

பாசவுலகிலெனை நேசமுடனே யாளும்
தாசன் துரைசாமியின் சஞ்சலமகற்றவாரும் (ஆ)

வேலனே இந்த வீணனை என்ற வர்ணமேட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தேவனே கெட்ட தீயனை யேன் அமைத்தாய்—உனை
தினமுஞ்செபம் புரியாப்பழி யுறுமானிட வீணாகிய
தீயனை யேன் அமைத்தாய் (தே)

அநுபல்லவி.

பாவக்கடலில் முழுகி மனம் நின்று
பலமாமுயிர் திடமாமென நினைமானிட வீணாகிய
தீயனை யேன் அமைத்தாய் (தே)

சரணம்.

கல்லதிலே பத்து கற்பனை வரைந்து
காட்சியாகசீனா மலைதனிலிருந்து
கல்லேமோயீசனின் காங்களில் சிறந்து
கனமாயளித் திடவேஉனை நினையாப்பெரும் வீணாகிய
தீயனையேன் அமைத்தாய் (தே)

சிறுவன் துரைசாமி செந்தமிழ்க்குகந்து
சித்தப வைத்தாளவா செப்பினேன் புகழ்ந்து
அரியபதங்களா உன்னையே நினைந்து
அனுதாபமு மடையாப்பெருங் கடுங்கோப வினைஞெய
தீயனையேன் அமைத்தாய் (தே)

பாண்டியன் ஈன்ற மீனாட்சி என்ற வர்ணமெட்டு.

இராகம்-அமீர்கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

மாதவன் சுவக்கினின் சேயே—அருள்வாய்
மாமரியாயே

அனுபல்லவி.

ஆதவன் உடையணி நீயே—உன்பாதம்
அண்டினேன் தாயே

தோகையரு.

மங்கள கெம்பீரியோ மாதர் பரிபாலியோ
மாகதரமா கற்கண்டோ
மகிதலமெங்கினும் உனைப்புகழாதவர்
இந்த மண்ணினிலுண்டோ

சரணம்.

ஓதினேன் மதிமிதிகாலி—அனையே
அதி ஜெயசீலி

தோகையற

பதித சங்காரியே பாமசிங்காரியே
பக்தர்க்கிரங்கும் ஒய்யாரியே
அதிவிதர்ணசீலியே அமிர்தகுணசாலியே
அடியேனுக்கனுகூலியே

சாற்றினேன் மீன்முடிசீலி—அனையே
வான் சுரர் கோலி

தோகையற

துதிமிகு தாளியே சூசை மணாளியே
சொல்லரும் வேதநாயகியே
சதிசெய்ப அலகையும் தாணியில் தவிக்குதே
சாந்தகுண சாலியே

போற்றினேன் தஞ்சை துரைசாமி—தாசன் சொல்
கொஞ்சுமிப்பூமி

பஹாரியாலா ஆயிதேக்கோ என்ற வர்ணமெட்டு
இராகம்–தேசிகம்–தாளம்–ஆதி

பல்லவி

தாயே மாமரி உம்மை தாயெனவே
புவி—தாயெனவே–சேசு–தாயெனவே

அநு பல்லவி

தான் துதித்துமே பணிந்தான் தனையனெனவே
தாரணியிலும்மை நிதம் தாயெனவே அருள் வாயெனவே (தாயே)

சரணம்

தூயமாதவன் சூசை துணைவி நீயே
நேச-மனைவிநீயே ராஜ-பிறவி நீயே

சொல்லொண்ணு வலங்கிருத சுந்தரிநீயே
தோன்றும் ஜெருசல மடத்துரந்தரியே எங்கும் நிரந்தரியே

• காணுவூர் புகழ் கருணுகரியே
பரி-பூரணியே-பெரு-மாரணியே

கந்தாஸ மாக்கித் தந்தகாரணி நீயே
கண்டுமையடி பணிந்தார் தாரணியே புகழ் வாரணியே (தாயே)

வாணுடு மகிழுறும் மாமரியே
கன்னி-மாமரியே–அன்னை–மாமரியே

மைந்தன் துரைசாமிபோற்றும் வான்சுந்தரியே
மண்ணிலும்மையே மறவேன் மனோகரியே வரமருள்மரியே (தாயே)

நடந்ததென்ன சொல்லம்மா என்ற வர்ணமெட்டு.
இராகம்-சாதநாமக்கிரியை—தாளம்-ஆதி.

பல்லவி

கன்னி மாமரி தாயே நீயே
கார்த்தருள் புரிவாயே தேவ (கன்

அன்னம்மாளின்மக ளென்னும்நற்சேயே
ஆண்டவன்வுளத்தில் அமர்ந்திருந்தாயே
மன்னன்தாவீதுகுல மாசில்வந்தாயே
மைந்தன்துரைசாமிக்கு வரமருள்வாயே (கன்)

ஜெருசலமாநகர் திருமடமிருந்தாய்
தேவகட்டளைப்படி திருமணம்புரிந்தாய்
குருமொழிப்படியேநீ கோவில்விட்டகன்றாய்
குணவான்வளனோ டவர்நகர்சென்றாய் (கன்)

கபிரியேல்தூதன்வாக் கண்டுமேதுதித்தாய்
கடவுளின்வருகையை காணசம்மதித்தாய்
அபரிமிதமாய்தேவ அருள்தனைவகித்தாய்
ஆண்டவனைக்கருவா ஏன்றுமேதரித்தாய் (கன்)

வாகனமீதிலேறி வளர்பெத்திலேம்சென்றாய்
...ப்பசியினாலே வருந்திடவேநின்றாய்
காமவெறிமிகுந்த காந்தாரியைக்கண்டாய்
காட்சியாய்கதிதர கருணையும்கொண்டாய் (கன்)

தாசரதியே ஸ்ரீராமா என்ற வர்ணமெட்டு
இராகம்-இந்துஸ்தான்-கவாய்—...

பல்லவி.

சேசு அன்னையே மாமரி சூசையின் பாரி

அனுபல்லவி.

காசினியில்உனையே ...சித்தவாதனையே
கதியளிக்கும் தயாபரி ...சையின்பாரி (சேசு)

நேசபாலனைக்கொஞ்சி ஆசையினாலேநெஞ்சில்
நீயணைத்தாய்மனோகரி சூசையின்பாரி (சேசு)

224318
சென்னை 600 008

ஏரோதன்பாவிக்காக எகிப்துநாட்டிற்குஏக
எண்ணினையே பராபரி சூசையின்பாரி (சேச)

பாரோர்புகழுந்தாயே பாவையன்னம்மாள்சேயே
பட்சம்வைத்தெனையாதரி சூசையின்பாரி (சேச)

தஞ்சைதுரைசாமி உன் தாளிணைப்பணிந்தேன்நின்
தயையருள்குணசாகரி சூசையின்பாரி (சேச)

எப்போதானிரங்குமோ என்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாகடை-தாளம்-ஆதி.

பல்லவி

அன்னை மரியே வாராய்
அன்பாய் வரமே தாராய் (அன்)

அனுபல்லவி.

அன்னம்மாளீன்றசேயே ஆண்டவர்போற்றுந்தாயே
அன்னையேஉன்னையே அண்டினேன்காவென்னையே (அன்)

மகிழ்வாயாலயம்சென்ற மகனைக்காணாமல்நின்ற
மாமரி தாய்மரி வந்திங்கெனையாதரி (அன்)

அருளப்பருக்குநீயே அளித்தாயுணவுதாயே
அப்மணிவிண்மணி அடியேனைக்காரம்மணி (அன்)

தஞ்சைவாழ்துரைசாமி தாசன்தாயெனப்பூமி
சாற்றுமேபோற்றுமே சந்ததமுமேற்றுமே (அன்)

அர்ச். சூசையப்பர்பேரில்.

அரிமருகாவுனை என்ற வர்ணமெட்டு

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி

பல்லவி

சூசைமுனியுனை துதிக்கிறேனே யான்

அனுபல்லவி

சேசுநாயகனையே திருக்காமேமந்தினவா
செல்வன்சமேகோப்புவி னுத்தமபுத்திர (சூசை)

நீப்பியின்கர்ப்பமதில் நிகமேழுமாய்மாதமே
நீங்கிடவேஜென்மப் பாவமின்றிவந்த (சூசை)

பனிரெண்டாம்வயதினில் பாரில்நீதுறவிமாய்
பக்திசெய்வேனெனப் பார்க்குவாக்களித்த (சூசை)

மணமதைவெறுத்துப்பின் மணமதில்விரதமாய்
வனமதில்சென்று தவமதுபுரிந்த (சூசை)

வானவனை ஒருவன் மாதவனுகவுனமுன்
வருவதைக்கண்டுநீ யறிந்துமுணர்ந்த (சூசை)

பாலன் துரைசாமியின் பாடலுக்குகந்த
பார்த்திபனேயெனைக் காத்திடவேவந்த (சூசை)

திரு. செந்தூரிலிருக்கும்வேலனை என்ற மெட்டு
இராகம்-செஞ்சுருட்டி - தாளம்- ஆதி

கண்ணிகள்.

மணத்தைவெறுத்து வனத்தில்புகுந்தவா—சூசைமுனிவ
னாத்தால்பானை காத்தில்தரித்தவா — நான்
வாழ்த்தியேசிரந் தாழ்த்தியேஉனை
போற்றியேபுக ழேற்றினேனே (மண)

மாமரிதனை நீமணம்புரிந்தாய்—பானைக்காண
மகிழுறும்படி ஜெகமதிலிருந்தாய்— அன்று
மறைவழிப்படி காமதில்தடி
குறையாக்கொடி பூத்தவனே (மண)

மெச்சிடும்படி தச்சுவேலையே—நீபுரிந்தாய்
மேதினி தனிலோ துங்காலையே—நீ
விந்தையாயொரு மந்திரந்தனை
சிந்தைதன்னில் ஜெபித்தவனே (மண)

ஆதவனிகர்மா தவக்கனியே— அருள்புரிவாய்
அண்டினேனுனைக்கண்டு மாமுனியே— நீ
அன்பர்கள்தொழு மின்பமேயிதோ
நின்பதந்தன்னை நம்பினேனே (மண)

பூமியில்துரை சாமியின் பதமே—தெரிந்துணர்ந்தே
போற்றினேன்புகழ் சாற்றினேனிதமே
பொன்னுலகினில் மின்னிடும்பர
னுன்னதவரம் பெற்றவனே (மண)

சோம சேகரனருளும் பாலா என்ற வர்ணமெட்டு
இராகம் தேசிகதோடி—தாளம்—ஆதி

பல்லவி

சூசைமுனிமாதவனே காராய் நேராய் நீப்பி
ஆசைமகனேஎனையே பாராய் சீராய் எந்தன் (சூசை)

அனுபல்லவி

காசைநகர் பெண்கள்ஐந்து வாடி வாடி அழ
கண்டுடேசவத்தைசுற்றி கூடி கூடி நிற்க
ஆசீர்வதித்திரவனை நாடி நாடி அங்கு
அன்றுயிர்த்தாளுநம்மையே கொண்டாடி பாடி செய்த (சூசை)

நீபகனின் மண்டபத்தில் நின்று நின்று அங்கு
நிஷ்டைசெய்த புங்கவருக் கன்று அன்று எங்கள்
டாபமுறு யாக்கோப்பிவர் என்று என்று காட்டி
பகர்ந்தனையே பாலவனம் சென்று சென்று வந்த (சூசை)

வாமனும்முபதேசத்தைக் கொண்டு கொண்டு தன்
காமமதையேவிடுத்தான் தொண்டு தொண்டு செய்ய
சேமமுற்றான் நாவகனும் கண்டு கண்டு சுவாமி
சீக்கிரமுயிர்விடுத்தாள் மீண்டு மீண்டு வந்த் (சூசை)

தலைவன்முனிபாவுளனென் போமனே காமனே நின்று
தான்வசித்தமலையுணர் பூமானே தேனே மேலும்
மலையில்கண்டவேடருக்குத் தானே தானே வேதம்
மகிழ்வாயுபதேசஞ்செய்த கோனே கோனே எந்தன் (சூசை)

வாதநோயினாலேவாதைப் பட்டு பட்டு எட்டு
வருஷஞ்சென்றுபின்னுயிரை விட்டு விட்டு பான்
ஸீதமாய்முடிசிரசி விட்டு இட்டு உமை
நித்தியமுமேதுதித்தார் தொட்டு தொட்டு கந்தன் (குசை)

லெயுமேபோல்த்தாயனது முன்னே முன்னே நீயும்
நின்றவனைரக்ஷித்தாயே மன்னே மன்னே துதி
செய்யும் துரைசாமிபதம் சொன்னேன் சொன்னேன் இந்த
சிறுவன்மீதில்கிருபையையும் பொன்னே பொன்னே கந்தன் (கு)

கந்தா பரங்கிரிவாழ் கதிரேசனே என்ற வர்ணமேட்டு

கன்னிமாமரிதனைக் கண்டவனே — அங்கு
காட்சியாய் மணமது கொண்டவனே உனை
கண்டுதுதித்தியான் மண்டலமீதிலுன்
தொண்டுபுரிந்திட தொண்டனெனக்கருள் (கன்)

கானகத்தின் மானோவென
வானவாதிசயிக்கும — கன்னி
வானவரும் தானவரும்
ஞானமிதோ வென்றுரைக்கும் — கன்னி
காந்தியோ வேதாந்தியோவோர்
சாந்தியோ வெனஜொலிக்கும் — கன்னி
கற்பகமோ அற்புதமோ
தற்பர வடிவோவெனும் — கன்னி

மண்ணில் மாதவம் செய்த மாதவனே — கன்னி
மணவாளா வாருமென் சாதகனே என்
மனத்தில் வருத்திடும் பெருத்த குறைகளை
க்ஷணத்தில் பொறுத்துமே வரத்தையளித்திடும் (மண்)

மன்னர்குலந் தன்னில்பிறந்
தன்னிய பரதேசிபோல் — மண்ணில்
வானவரும் கோனவரும்
மாநகரிலே துதிக்க — மண்ணில்
மங்களமாய் இங்கள்மிதி
மங்கையை யடைந்திடவே — மண்ணில்

வல்லபரன் தொல்லைநீக்கி
பிள்ளையா யுதித்திடவே—மண்ணில்

தஞ்சமெனவுனையே நாடினேனே கண்டு
தஞ்சை துரைசாமி சொற்பாடினேனே
தற்பரனைக்கா மற்புதமாயணி
கற்பிலுயர் பெரும சற்பிரசாதா (தஞ்)

தாரணியில் கோரமெனும்
பாரமதை நீக்கிடுவாய்—தஞ்சம்
தாசனுனை நேசமுடன்
பூசித்திடவேயருள்வாய்—தஞ்சம்
சத்தியமா யித்தரையில்
பத்தியுமெனக்களிப்பாய் — தஞ்சம்
சங்கையுடன் மங்களமாய்
எங்கு முனையான் துதிக்க—தஞ்சம்

லூர்து மாதா காக்ஷி.

சேந்தமிழை உலகினில் என்ற வர்ண மெட்டு
இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி

கண்ணிகள்

இப்புவிமீதிலொரு அற்புதம் கண்டேனே நான்
கற்பனை செய்யவல்லேனே—மாமரிதன்னின்
அற்புதமென்ன சொல்வேனே

இதயகமலமதி ஆதயஞ் செய்புமரி
சுதனென உனதிரு காமதி லேர்திடும்

எந்தனின் தாயே வருவாய்—துரைசாமியின்
செந்தமிழ் பாடற் கருள்வாய்

பிராஞ்சு தேசமதனில் பிராஞ்சீஸ்குபிருஸென்றோர்
பெர்னார்த்தின் அன்னை தந்தையே — அவரின்பாலே
பிறந்தாளிவளும் விந்தையே

பிரபல காவேனும் நதியினருகினில்
பல பல வித வித மாமதில் நின்றே
விறகு ஒடிக்கவே சென்றாள்—அலைவாரியின்
சருகு பொறுக்கவே நின்றாள்
மண்டி யெழுந்தகாற்றிற் கண்டிபயந்து பெர்நார்த்
மாமலைச்சாரலின்பாலே—ஒடுங்கி நிற்க
பூமலர் ரோஜாவின் மேலே
பொன்னிழை பூந்துகில் மின்னலை போலவள்
சென்னியில் மீன்முடி மின்னி ஜொலித்திட
பொற் பதுமையைப் போலவே—நிற்கவேகண்டு
செப்பிஞளிப்புதுமையே
தூய தவளமணி தாயினிடை அலங்கித்
தொங்குதே நீலப்பட்டுமே—தகதகன
தங்க வொளியும விட்டுமே
துன்பமதில் மனம் வெம்பி யுனை திரு
அன்புய வடிகளை தெம்புடனானி
தொண்டுசெய் துன்னைப்பாடினேன்—பக்தர்கள்போற்ற
கண்டுன்னாலயம் காடினேன்
பற்களருபபழகும் சொற்கள்கரும்பிதழும்
பவளவாய் தனைத்திறந்து—மரியென்றென
பகர்ந்தனள் அன்னைமகிழ்ந்து
பாவிகட்காய்புவி மேவியுலகில்வளன்
தேவியெனக்கொரு கோவிலுண்டாக்கென
வந்துபிரசன்னமானாள்—பலவரங்கள்
தந்துதெரிசனமானாள்

அர்ச்-சவரியார்பேரில்

குயிலே யென்றன் மீதிலுனக்கேன்ன என்ற வர்ணமெட்டு

இராகம்-மால்கோஷ்-தாளம்-சாப்பு

பல்லவி

தவமே புரிந்திடும் சாதுமகானே
சற்குணவானே தயை யருள் கோனே
சவரியாரெனும் வர மிகுந்தோனே
(தவமே)

கவலையால் சொந்தேன் கதிபெற வந்தேன்
கஞ்சமலர்பாதம் தன்னைப்பணிந்தேன்

(தவமே)

சிந்தெனு மூரில் வந்தவா பாரில்
செய்தீர் புதுமை பல பல நேரில்

(தவமே)

சிறுவையைக்கண்டு சிங்கார நண்டு
சிறப்பா யெடுத்தே தாவும் நீர் கொண்டு

(தவமே)

இறந்தோரை நீரே எழுப்பினீர் நேரே
இலங்கும் கோவையி லடக்கமானீரே

(தவமே)

துரைசாமி நானே துதிசெய்தேன் தானே
தூயனே வரம் தாரும் மென் மேலும் கோனே

மங்களம்

நீநாமரூபமுலகு என்ற வர்ணமெட்டு
இராகம்-சௌராஷ்டிரம்—தாளம்—ஆதி

பல்லவி

மங்களம் மங்களமே
மங்கள மிங்கிர்தமே (மங்)

அனுபல்லவி

எங்கும் நிறை பரனே
ஏசு சர்வேஸ் பரனே (மங்)

மேரோர்கள் வானருக்கும்
மூவுலக காள்பவர்க்கும் (மங்)

மானகர் புகழும் வேதம்
மறையவர் போற்றும் நீதம் (மங்)

ஆனந்த கான கீதம்
அவனி புகழ் சங்கீதம் (மங்)

தஞ்சை துரைசாமியே
சாற்றும் தமிழ் காமியே (மங்)

வாழ்த்து.

இந்த உடம்பை நம்பி என்ற வர்ணமெட்டு
இராகம்-இந்துஸ்தான்-காப்பி-தாளம்-ஆதி

கண்ணிகள்.

ஆனந்த மானந்த மானந்தமே
மானிலத்தன்னில் பிர மானந்தமே (ஆன)

இங்கிலீஷ் ராஜாங்க மென்றுமாள்க
மங்களமாய் ஜார்ஜு மன்னன் வாழ்க (ஆன)

தந்தி ரயிலும் தபாலும் மோட்டார்
அந்தமா யெங்கு மமைத்துவிட்டார் (ஆன)

காலேஜும் ஹைஸ்கூலும் கடிகாரமும்
மேல்நோக்கிச்செல்லும் விமானமதும் (ஆன)

கடலைக்கடந்திட கப்பலதும்
திடமாயளித்தாரே செப்பிடவும் (ஆன)

தண்ணீர்க்குழாய் தர்மவைத்தியமும்
பண்ணி யிவர் பாது காத்துவரும் (ஆன)

இன்னும் பல தன்மை செய்து நன்மை
கன்னியமாயாண்டு வாராருண்மை (ஆன)

தஞ்சை நகர்துரை சாமிபதம்
நெஞ்ச மகிழ்வாரே பாடி நிதம் (ஆன)

முற்றிற்று.

இதன் இரண்டாம் பாகம் கூடிய சீக்கிரம் வெளிவரும்.

அறிவிப்பு.

நமது உத்தரவன்னியில் எவரும் இப்புஸ்தகத்தையாகிலும் அல்லது புத்தகத்திலுள்ள பாடல்களையாகிலும் அச்சிடக்கூடாது. அச்சிடுவார்களேயானால் அதினாலுண்டாகும் சகலவித நஷ்டங்களுக்கும் அவர்களே யாத்தியப்படுவார்களென இதன் மூலமாய் அறிவிக்கப்படுகிறது.

வியாபாரிகளுக்கு குறைந்தவிலை.

1. இரண்டணா விலையுள்ளதும் நம்மாலியற்றப் பெற்றதுமான நூதன "சிங்காரப் புகழ்பா" வென்னும் வேளாங்கன்னி ஆரோக்கியமாதாவின் சரித்திரப்பாடல் புத்தகங்களை வாங்கி விற்பனை செய்பவர்களுக்கு

1000-புத்தகங்களுக்கு ரூ. 40—0—0 } வீதக் கிரயமாகக்
500-புத்தகங்களுக்கு ரூ. 25—0—0 } கொடுக்கப்படும்

2. நாலணாவிலையுள்ளதும் நம்மாலியற்றப் பெற்றதுமான பேரின்ப ஆனந்தகான கீர்த்தனங்களென்னும் பாடற்புத்தகங்கள்

1000 புத்தகங்களுக்கு ரூ. 80—0—0 } வீதம் கிரயமாகக்
500 புத்தகங்களுக்கு ரூ. 50—0—0 } கொடுக்கப்படும்

விற்பவர்களின் விலாசத்தையும் தெரிவித்தால் புத்தகங்கள் மேல் அட்டைகளில் அச்சடித்து அனுப்பப்படும்

அட்வான்சுடன் ஆர்டர் கொடுப்பவர்களுக்கு வி. பி. மூலமாய் [அனுப்பப்படும்.

பிழைதிருத்தம்:-முதல்பக்கம் நேரிசைவெண்பாவில் இரண்டாவது வரியில் பானுமுடிஎன்பதை பானுமடிஎன்று வாசிக்கவும்.

விலாஸம் T. M. துரைசாமிபிள்ளை,
[illegible] புரி, தஞ்சாவூர்.

ஒருயோகீஸ்வரரால் அனுக்கிரகம் செய்யப்பட்ட

மஹா ஆச்சரியமான தேள் விஷ மருந்து.

தேள்கொட்டி சகிக்கமுடியாமல் கதரி அழுது கொண்டு வருகிறவர்களுக்கு இம்மருந்தை உபயோகித்த ஒரேநிமிஷத்தில் எப்பேர்ப்பட்ட விஷமானாலும் காற்றில் அடிபட்ட பஞ்சைப்போல் பறக்கடித்து உடனே சிரிப்புண்டாக்கி பக்கத்திலிருக்கும் எல்லா ஜனங்களுக்கும் ஆச்சரியத்தை உண்டாக்கிவிடும். இன்னும் பாம்பு, நட்டுவாக்கலி, ஜலமண்டலம், பூரான் சாய், மூஷிய எல்லா விஷங்களுக்கும் இது நிகரற்ற மஹா நூதனமருந்து

விலை அணா 8. தான்

1-முதல் 2-வரையில் அனுப்ப வி. பி. செலவு அணா 6. பிரத்தியேகம்.

3 புட்டிக்கு ஆர்டர் செய்தால் வி. பி. செலவு இனாம்.

முன்னடி ரூபா. 4½-மணியார்டர் அனுப்பினால்

1-டஜன் புட்டிகள் அனுப்பப்படும்.

பன்னீர் செய்யும் தைலம்.

ஓர் அரைபாட்டில் காலி சீசாவில் நிறைய சுத்தஜலத்தை நிரப்பி அதில் 2-சொட்டு ஷெ ஜலத்தை அதில் விட்டு குலுக்கினால் ஷெ எல்லா ஜலமும் உடனே முதல் நம்பர் பன்னீராகிவிடுகிறது. 8-அணா தைலத்தால் சுமார் 20 பாட்டில் பன்னீர் கிணத்த மறுநிமிஷமே செய்யலாம் இன்னும் இதை உடுப்புகளில் பூசினால் இதன் மஹா நூதன வாசனையினால் அளவில்லாத சந்தோஷத்தை கொடுக்கும். நீங்கள் நித்தியம் ஸ்நானம் செய்யும் அண்டாஜலத்தில 2-சொட்டு விட்டு ஸ்நானம்செய்தால் உங்கள் சரீரம் வீடுமுழுதும் கமகமவென்று பரிமளித்து அடங்காத ஆனந்தத்தைக் கொடுக்கும்.

விலை அணா 0—8—0 தான்

மகா சந்தனாதிதைலம் 18-பலம் டின் ரூ. 2—4—0 வி பி செலவு அணா 11

சரீரத்தில் படருகிற எல்லாவித படைகளுக்கும் அபூர்வமருந்து அணா 4

மேகப்பருவு மருந்து...	...	...	...	0—6—0
செவி நோய்களுக்கு மருந்து	...	...	...	0—8—0
மேமத்தைப் போக்கும் மருந்து ...		...	...	0—6—0
ஆறாத ரணங்களுக்கு அற்புத களிம்பு		...	...	0—8—0
கண் ரோகங்களுக்கு அபூர்வ மருந்து		...	...	1—0—0
நீருத வெட்டைக்கு நிகரற்ற பஷ்பம்		...	...	1—0—0

வி. பி. செலவுகள் பிரத்தியேகம்

(விலாசம்) மானேஜர் எச். எம். ஹால்,

2043 நெ. எல்லையம்மன் வீதி தஞ்சாவூர்.

ஆர்டர் செய்பவர் இந்தபுஸ்தகத்தின்பெயரை குறிப்பிட்டெழுதவும்.